[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 29

ஒவ்வொன்றும் 10 இலட்சம் ரூபாய் செலவில் 500 'அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள்' 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

14. சுய உதவிக் குழுக்களுக்குப் போதுமான கடன் உதவியை, உரிய நேரத்தில், குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகள் வழங்குவதன்வாயிலாக பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய இயலும். மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக கடந்த 5 ஆண்டுகளில் 26,460 கோடி ரூபாய் கடனாக வங்கிகள்மூலம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் வெளியிட்ட இந்த அறிவிப்புகள்மூலம் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்கப்பெறுவதுடன், அவர்களின் பொருளாதார நிலை உயரவும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (இ) பால் உறைகளுக்கான பாலிதீன் பிலிம் தொழிற்சாலை நிறுவுதல், நவீன பாலகங்கள், டெட்ரா பேக் பால் பாக்கெட்டுகள் தயாரிப்பு இயந்திரங்கள் நிறுவுதல், கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், வெண்ணெய் சிப்பம் கட்டும் இயந்திரம் நிறுவுதல், மாதவரம் பால் பண்ணை குடியிருப்பைப் புனரமைத்தல், புதிய ஓய்வூதியத் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் நாளொன்றுக்கு 8.35 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் உயர்த்தப்பட்டுள்ளது. பால் குளிர்விக்கும் அறைகளின் திறன் நாளொன்றுக்கு 7.30 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவை தவிர, நாளொன்றுக்கு 7.30 இலட்சம் லிட்டர் அளவுக்கு பால் குளிர்விக்கும் அறைகள் பல்வேறு பால்

2016 ஆகஸ்ட் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பண்ணைகளில் அமைக்கப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலையில் நாள் ஒன்றுக்கு 20 மெட்ரிக் டன் திறனுள்ள பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவேதான், நடப்பு ஆண்டில் பால் கொள்முதல் சராசரியாக 29.32 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. கடந்த 27-6-2016 அன்று 31.39 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பால் வளம் சம்பந்தமாக பின்வரும் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. பாக்கெட்டுகளில் அடைக்கப்படும் பால் உறைகள் தயாரிக்க தனியாரிடமிருந்து பாலிதீன் பிலிம் கொள்முதல் செய்யப்படுகிறது. சில சமயங்களில் இவை தரமற்றதாக உள்ளன. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, தரமான பாலிதீன் பிலிம்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். விழுப்புரம் மாவட்டத்திலுள்ள உளுந்தூர்பேட்டையில் வருடத்திற்கு 5,000 மெட்ரிக் டன் திறன் கொண்ட ஒரு பாலிதீன் பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலை 82 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பால் பண்ணையின் திறனை மேம்படுத்தத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், நவீன பாலகங்கள் அமைக்கப்படும். குளிர்சாதன வாகனங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவை அனைத்தும் 4 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பால் பண்ணையில் உயர் வெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட பால் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நுகர்வோர் வசதியைக் கருத்தில் கொண்டு, ஆறு மாதம் வரை பயன்படுத்தக்கூடிய வகையில் Helicap applicator வசதியுடன் ஒரு லிட்டர் Tetra pack பால் பாக்கெட்டுகள் தயாரிப்பதற்குத் தேவையான இயந்திரங்கள் 27 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 29 நண்பகல் 12-00

4. மதுரை பால் பண்ணையில், நாளொன்றுக்கு சராசரியாக 2.60 இலட்சம் லிட்டர் பால் கையாளப்படுகிறது. இப்பால் பண்ணையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தவும், எரிசக்தியை சேமிக்கவும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் 13 கோடி ரூபாய் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், சூரிய ஒளி செறிவூட்டி மின்மாற்றிகள் மற்றும் வெண்ணெய் சிப்பம் கட்டும் இயந்திரம் ஆகியன நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சென்னை, மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் பால்வளத் துறையின் கட்டுப்பாட்டில் 452 அரசு குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகள் அரசுத் துறை பணியாளர்கள் மற்றும் ஆவின் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேற்படி குடியிருப்புகள் 1962 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்டவை ஆகும். அவை தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளன. எனவே, இந்தக் குடியிருப்புகள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்த்து புனரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஓய்வு பெற்ற பணியாளர், வருங்கால ஓய்வூதியத் திட்டம் 1995-ன்கீழ் தற்போது பெற்று வரும் ஓய்வூதியத் தொகையுடன், கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 3,500/- ரூபாய் பெறும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) புதிய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், ஓய்வூதியத் தொகையில் 50 சதவீதத் தொகை குடும்ப ஓய்வூதியமாக அனுமதிக்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு 27 கோடி ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அரசுத் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதுபோல, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, மருத்துவ வசதி மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு 1 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)